**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 1,948,022 தொகைக்கான உக்காத குப்பைகளை வகைப்படுத்தும் களஞ்சியத்தின் கிரயத்தை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு இலக்கம் 02 இன் மூலம் சரிசெய்வேன். |
| (ii) | ரூபா 1,297,047 தொகை கூட்டுப் பெறுமதியை உடைய பல்லியவத்த பொது நூலகம் மற்றும் பொது களிப்பறை அகற்றப்பட்டிருந்த போதும் அப் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | அகற்றிய சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளில் இருந்து அகற்ற வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு இலக்கம் 03 இன் மூலம் சரிசெய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தெபரவெவ சந்தையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக 2016 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த ரூபா 1,125,000 தொகை கூட்டுப் பெறுமதியினை கொண்டிருந்த கட்டிடங்கள் மற்றும் பொது களிப்பறைக் கணக்குகளில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | அகற்றிய சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். | 2019 கணக்குகளில் தயாரிக்கும் போது நாட்குறிப்பு 04 இன் மூலம் சரி செய்தேன். |
| (iv) | 2017 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட் டிருந்த தெபரவெவ சந்தை கட்டிடம், பொது களிப்பறை மற்றும் மீன் விற்பனை நிலையம் என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 5,100,816 தொகை மூலதனப்படுத்தி யிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு இலக்கம் 5 இன் மூலம் சரி செய்வேன். |
| (v) | 2017 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டின் படி ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 130,000 தொகை கிரயத்தையுடைய டிரக்டர் டெய்லர் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் கிரயத்தை அகற்ற வேண்டும். | 2019 கணக்குகளில் தயாரிக்கும் போது நாட்குறிப்பு இலக்கம் 6 இன் மூலம் சரி செய்வேன். |
| (vi) | உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து பிரதேச சபைக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த டிரக்டர் டெய்லர் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்ய வேண்டும். | தகவல்கள் பிரதேச சபையில் காணப்படா மையால் பெறுமதியை கணக்கீடு செய்யவில்லை. |
| (vii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடைகளாகக் கிடைத்திருந்த 04 சொத்துக்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 98,890 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு இலக்கம் 07 இன் மூலம் சரி செய்கின்றேன். |
| (viii) | மீளாய்வாண்டின் போது நீதிமன்றத் தண்டப் பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் முறையே ரூபா 979,772 தொகை மற்றும் ரூபா 6,091,015 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | முன்னைய ஆண்டிற்கான கணக்குகளை சரிசெய்வது தொடர்புடைய ரூபா 409,031 தொகை கூட்டுப் பெறுமதியை உடைய கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரிசெய்யும் போது உரிய பேரேட்டுக் கணக்குகளின் மூலம் சீராக்கல்கள் மேற்கொள்ளப் பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு செயற்படுகிறேன். |
| (x) | மீளாய்வாண்டின் போது நிர்மாணவேலை ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது ரூபா 630,973 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கடன் கொடுத்தோர் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது நாள்வழிக் குறிப்பு 08 இன் மூலம் சரி செய்வேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 53,521,200 தொகைக்கான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 7,689,590 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் சமமின்மைகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 303,668 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறியத் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | 2019 கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 47,793,768 தொகைக்கான 16 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விரிவான அட்டவணை தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 கணக்குகளுடன் சமர்ப்பிக்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணம் 371 | முற்பணங்கள் குறிப்பிட்ட விடயம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டுமெனினும் ரூபா 279,869 இற்கான முற்பணம் தொடர்பாக அவ்வாறு செய்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 166,869 தொகை பெறுமதியான முற்பண மீதி தொடர்பான தகவல் களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் 2018 ஆண்டிற்கான ரூபா 113,000 தொகைக் கான முற்பண மீதி தீர்க்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி | காலவதியாகியிருந்த 31 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களுக் காக ரூபா 126,480 தொகை கட்டணம் அறவீடு செய்து அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட 31 அனுமதிப் பத்திரங்களை 2019 மே 31 திகதிக்கு முன்னர் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 13 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 13 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | தென் மாகாண பிரதான செயலாள ரின் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2014 இலக்க சுற்றறிக்கை | பிணை வைக்க வேண்டிய 04 பதவிகள் தொடர்பாக ரூபா 39,000 பிணை வைப்புச் செய்திருக்க வில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய 14 உத்தியோகத்தர்களுக்கு பிணை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,997,078 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,892,629 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 27,015,730 இற்கான மறை பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது. | சிறந்த நிதிக் கட்டுப்பாடு ஒன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் மேற்கொண்ட காரணத்தினால் திரண்ட நிதியம் மறைப் பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது. |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,872,000 | 3,021,970 | 2,815,626 | 3,223,896 | 2,820,000 | 2,963,492 | 3,100,407 | 3,252,567 |
| வாடகை | 10,351,300 | 14,715,167 | 12,665,597 | 33,72,682 | 9,622,700 | 10,145,003 | 10,717,314 | 1,089,089 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 13,150,000 | 16,708,495 | 15,520,979 | 1,291,016 | 13,061,500 | 14,720,225 | 15,087,881 | 336,423 |
| ஏனைய வருமானங்கள் | 30,163,900 | 26,802,429 | 23,456,152 | 22,153,406 | 23,379,400 | 14,509,692 | 12,877,398 | 18,214,481 |
| மொத்தம் | 56,537,200 | 61,248,062 | 54,458,354 | 30,041,000 | 48,883,600 | 42,338,412 | 41,783,000 | 22,892,560 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 84,140,622 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 54,458,354 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 65 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம், சந்தை வாடகை மற்றும் களியாட்ட வரி என்பவற்றின் நிலுவை அதிகரித்திருந்தமையால் நிலுவை அதிகரித்திருந்தது. |

## 2.3.3 வீதிவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 2,900,144 தொகையாகக் காணப்பட்டதுடன் நிலுவையை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக ஆதன உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் ஒப்படைக்கப்பட்டதுடன் வருமானப் பரிசோதகர் களுக்கு கைப்பற்றாணை வழங்கியுள்ளேன். |
| (ஆ) | அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப் பட்ட பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி அதிகாரப் பிரதேசம் திருத்தப்பட வேண்டுமெனினும், 1986 மார்ச் 14 திகதிய வர்த்தமானியின் மூலம் இனங்கண்டிருந்த முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | வீதவரி அதிகாரப் பிரதேசங்கள் காலத்துக்கு காலம் திருத்தப்பட வேண்டும். | 2018 ஜூலை 18 திகதிய 20 ஆம் இலக்க கூட்ட தீர்மானத் தின் பிரகாரம் வீதவரி பிரதேசங்களை திருத்தி சட்ட அலுவல்கள் பூர்த்தியடைந்த பின்னர் குறிப்பிட்ட பிரதேசங்களில் கட்டணம் அறவிடுகின்றேன். |
| (இ) | வீதவரி ஆவணங்கள் 05 வருடங் களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் 2007 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2018 ஆண்டின் போது புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றிற்காக வெளிக்களப் பரிசோதனை மேற்கொண்ட போதிலும் இதுவரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருக்கவில்லை |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 554,225 இற்கான குப்பை வரி அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பந்தியை ஏற்றுக் கொள் வதுடன், ரூபா 457,725 தொகை 2019 ஏப்ரல் 23 திகதி அறவிடப்பட்டதுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.3.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான கடைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 2,482,498 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் ரூபா 543,608 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியை விரைவாக அறவீடு செய்வேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய இயந்திர உபகரண வாடகை வருமானம் மற்றும் வீட்டு வாடகை முறையே ரூபா 336,150 தொகை மற்றும் ரூபா 72,072 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019 ஜனவரி 31 திகதி ரூபா 24,750 இற்கான தொகை அறவிடப்பட்டதுடன், மீதியை செலுத்தும்படி குறிப்பிட்ட நபர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி முறையே ரூபா 79,250 தொகை மற்றும் ரூபா 202,400 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டின் முதல் காலாண்டில் நிலுவை தொகையில் ரூபா 30,200 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,738,558 தொகை மற்றும் ரூபா 16,269,432 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகையாக ரூபா 10,000,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக பயன்படுத்தப்படும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் காணிக்காக பல்வேறு அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 05 ஏக்கர்கள் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேலும் 25 ஏக்கர்கள் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலத்தில் ஒரு பகுதியில் திண்மக் கழிவுப் பொருட்கள் தீ வைக்கப்பட்டிருந்த துடன் குப்பையை அகற்றப்படும் நிலத்திற்கு வரும் யானைகள் மற்றும் மாடுகள் போன்ற மிருகங்கள் குப்பைகளை உணவாகப் பயன்படுத்துவதனால் அந்த மிருகங்களின் உயிருக்கு ஆபத்து ஒன்றும் காணப்பட்டது. | விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காணியின் உரிமையை உறுதிப் படுத்தப்படாமையினால் வேலி ஒன்று போடுவதற்கு இயலாதுள்ள துடன் அங்கீகாரமற்ற நபர்கள் வந்து தீ வைப்பதுடன் எதிர்காலத்தில் காணியை உரித்தாக்கிய பின்னர் யானை வேலி ஒன்று போடுவதன் மூலம் சரி செய்வேன். |
| (iii) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் SU-B 01316(R1) இலக்கங் கொண்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் பிரகாரம் போதியளவு தீ அணைக்கும் உபகரணங்கள் மற்றும் வசதிகள் சேதனப் பசளை செயற்தளத்தில் நிறுவப்பட்டு பேணப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். | தீ அணைக்கும் உபகரணங்கள் மற்றும் வசதிகள் நிறுவப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்கு களை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக புரிந்துணர்வு ஒன்றினை பெற்று வாழ்க்கை தரத்தை மேம்படுத்தலுக்காக நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்தல். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்காணல் மற்றும் தவிர்த்தலுக்காக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டின் மூலம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் இனங்காண வேண்டும். | 2019 ஆண்டு முதல் மாதாந்தம் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்வேன். |
| (ஆ) | பிரதேச சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 312 கட்டிட வரைபுகளின் காலவதியாகியிருந்ததுடன், அந்த கட்டிடங்களுக்காக ரூபா 1,639,804 இற்கான கட்டணம் அறவீடு செய்து இணக்கச் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை. | உரிய விவரக் குறிப்புக்களின் படி நிர்மாணிக் கப்பட்டுள்ளதா எனப் பார்த்து கட்டணம் அறவிடப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | தொழில் நுட்பசேவை உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி தொடல்செயல் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நிர்மாண வேலைக்காக சாத்தியக்கூறு அறிக்கை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சாத்தியக்கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான நிர்மாண வேலைகளுக்காக சாத்தியக்கூறு அறிக்கை ஒன்று தயாரிப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 12 மிகைப் பதவியணி முறைப்படுத்திக் கொள்வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைப் பதவிகளை முறைப் படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நிர்மாண வேலைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்க வேண்டிய நிர்மாண வேலைகள் இனங்காண வேண்டும். | கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளும் படி விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்ததுடன் எதிர் காலத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதி தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த கடைகளின் உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டுமெனினும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 132 கடைகளின் உடன்படிக்கை நாளது வரை ஆக்கப்பட்டதுடன் மீதியான 336 கடைகளில் உடன்படிக்கைகள் 2019 ஜுன் 30 திகதிக்கு முன்னர் நாளது வரை ஆக்குகின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில நிறுவப்பட்டிருந்த தொலைபேசி செலுத்துகை டவர்களுக்காக வருடாந்த வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்த வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்துகை டவர்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணம் அறவிடப்பட்டதுடன், டயலொக் நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களின் வாடகை அறவீடு செய்யும் போது தாபனக் கோவையின் அடிப்படையில் அன்றி மாதாந்தம் ரூபா 75 இற்கான வாடகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது. | மாதாந்த பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். | மாதாந்த வாடகை ரூபா 75 தொகை அறவிடப்பட்ட அடிப்படையினை கண்டறிய முடியவில்லை. அத்துடன் அபிவிருத்தி வேலை ஒன்றிற்காக உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தலம் உடைத்து அகற்றப்பட்டுவதால் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 5,807,500 கிரயத்தையுடைய பெக்கோ லோடர் இயந்திரம் சுமார் 07 ஆண்டுகள் முதல் தனியார் கராஜ் ஒன்றில் இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளாகி உக்கிய நிலையில் காணப்பட்டது. | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும். | முறைசார் விதமாக சபையின் அங்கீகரிகாரத்தை பெற்று கெட் நிறுவனத்தில் இருந்து தேவையான துணை கருவிகளை பெற்று தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள கராஜின் மூலம் திருத்த வேலைகள் மேற்கொள்வேன். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்பட்ட 18 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுத்தி வைப்பதற்காக வாகன தரிப்பிடம் ஒன்று தயாரித்திருக்காமையினால் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகிக் காணப்பட்டது. | வாகன முற்றம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 பாதீட்டின் மூலம் பணம் ஒதுக்கி வாகனத் தரிப்பிடம் ஒன்று முற்றம் நிர்மாணிப்பதுடன் தற்போது மஹசென்புர தகனகூடத்திற்கு அண்மையில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 06 வாகனங்கள் நீண்ட காலமாக செயற்படாது காணப்படுவதுடன், அவற்றை திருத்துதல் அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்படாது காணப்படும் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரைவாக திருத்தவேலை மேற்கொள்வேன். |

### 3.5.3 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் அனுபவிக்கும் 165 காணிகளின் மற்றும் 09 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | 162 காணிகளுக்கான அட்டவணை முதலமைச்சுக்கு அனுப்பியுள்ளதுடன் எதிர்காலத்தில் உரித்தாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.5.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான பல்வேறு இடங்களில் காணப்பட்ட இரண்டு வள்ளங்கள், 11 தையல் இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி ஒன்று, அச்சுக் கல் தயாரிக்கும் இயந்திரம் ஒன்று, கருங்கள் கிரஷர் இயந்திரம், 50kg கொள்திறன் கொண்ட பொல்வில் இயந்திரங்கள் 2 என்பன நீண்ட காலமாக செயற்படாது காணப்பட்டன. | செயற்படாத சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு பரிந்துரைகள் 2019 ஏப்ரல் 23 திகதிய சபை தீர்மானம் 07 இன் பிரகாரம் ஏற்றுக் கொண்டிருப்பதினால் அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவேன். |
| (ஆ) | திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலைய வளவில் ரூபா 1,948,022 இற்கான செலவில் 2017 திசெம்பர் 23 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், பண்டங்கள் சேகரிக்கும் கட்டிடம் மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டிடங்களைப் பயன்படுத்தி இருக்கவில்லை. | வாணிபப் பெறுமதிகளுடனான பண்டங்கள் கலஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்துகிறேன். |

**3.5.5 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் வழங்கியிருந்த பரிந்துரைகள் 2019 மார்ச் 12 திகதி வரையும் செயற்படுத்தியிருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டு பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும். | 2017 பண்டக் கணிப்பீடு பரிந்துரைகள் செயற்படுத்துவேன். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான பெறுகை திட்டம் தயாரிப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 12,510,925 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 21 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கும் போது பகுப்பாய்வு ரீதியாக பாதீடு தயாரிப்பேன். |
| (ஆ) | செலவு விடயமொன்றின் பாதீட்டு வரையறையை மிகைத்து ரூபா 3,745,404 இற்கான அதாவது 34 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கும் போது பகுப்பாய்வு ரீதியாக பாதீடு தயாரிப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 06 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 22,669,898 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்ட துடன், அவை 22 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கும் போது பகுப்பாய்வு ரீதியாக பாதீடு தயாரிப்பேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் வருடாந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது குழுக் கூட்டம் 01 மாத்திரம் கூடியுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது குறிப்பிட்டுள்ளவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |